முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1242

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

22.02.2023, புதன்கிழமை

1. ஓங்காரசபை கொண்ட ஞானியே
   ஓங்காரக்குடில் கொண்ட தவசியே
   ஓங்காரன் என் ஆற்றலாகவே வாழும்
   ஓங்கார ராஜனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
2. யானுமே சுபகிருது சால் திங்கள்
   (சுபகிருது வருடம் மாசி மாதம் 10 ம் நாள், 22.02.2023 புதன்கிழமை)
   உரைத்திடுவேன் ஞான அறிவுரை ஆசி
   ஞானவான்கள் உன் மூலம் கலியுகத்தில்
   நம்பகமுற உலகமெல்லாம் பரவி இனிதே
3. இனிதே அரங்கன் உன் அவதார நோக்கமாக
   இந்த உலகுக்கு ஞானபலம் தந்து
   கனிவேலவன் என்னை வணங்கும் முகாந்திரமாக
   கலியுகமெல்லாம் சரவண ஜோதி சக்தி பரவி
4. பரவியே உலக மாற்றமாக
   பாருலகம் சடுதி இனிதே காணும்
   துறவி அரங்கன் உன் தூய தர்மத்தாலே
   தேசமெங்கும் பசிபிணி அகன்றோடி
5. ஓடியே உலகோர்க்கு ஞானபலம்
   உண்மை நிறைந்த ஆன்மீக ஞான வழியாக
   நாடியே அகிலத்தில் பெருமாற்றம்
   நாட்டிடுவேன் அரங்கன் உன் ஆசியால் நடந்தேறும்
6. நடந்தேற கலியுகத்தின் சிறந்த ஞானிநீ
   நன்மைதருகின்ற கலியுகத்தின் சிறந்த தவசி நீ
   தடையின்றி உலகோர் உன்னை தொடர்ந்தால்
   தரணிக்கு சடுதி மாற்றம் நிகழும்
7. நிகழும் சடுதி ஞான ஆட்சிக்காலமாக
   நிகழும் சடுதி ஞானிகள் நிறைந்தயுகமாக
   நிகழும் சடுதி அரங்கன் உன் அருட்பார்வையாலே
   நிலவுலகில் ஞான ஆட்சியாக மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–